[14th March 1958

Intensive Manuring Scheme

* 321 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the amount allotted in 1956–57 for North Arcot district under the Intensive Manuring Scheme for sanctioning loans to agriculturists for the cultivation of paddy and sugarcane;

(*b*) the number of agriculturists who applied for the above loan;

(*c*) the number of agriculturists who were granted the loan, talukwise;

(*d*) whether the amount was surrendered; and

(*e*) if so, the reason therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*e*) A statement[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : போதுமான அளவுக்கு விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வந்திருந்தும்கூட, ஏன் பெருவாரியான பேர்களுக்கு அப்படிக் கடன் கொடுக்கப்படவில்லை ? மீதிப் பணம் " ஸரண்டர் " செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லலாமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : " ஸரண்டர் " ஒன்றும் செய்யப்படவில்லை. **1956–57**-ல் மொத்தம் ஒதுக்கப்பட்டது—இந்த ராஜ்யத்திற்காக ரூ. **4,69,800.** அதிலே ரூ. **4,68,122** விநியோகிக்கப்பட்டது. ஆனால், மனுக்கள் போடுகிறவர்களுக்கெல்லாம் கடன் கொடுக்கப்படவேண்டும் என்பது முறையல்ல என்பதை கனம் அங்கத்தினர் ஒப்புக்கொள்ளுவார்கள். போடப்பட்ட மனுக்களைப் பரிசிலனை செய்யவேண்டியிருக்கிறது. இதைப் பற்றி குறிப்பாக கலெக்டர் விசாரித்ததிலே நிராகரிக்கப்பட்ட மனுக்கள் எல்லாம் ***mala fide* applications** என்று சொல்லியிருக்கிறார்கள். அனேக மனுக்கள் உண்மையானவை என்றும், நியாயமானவை என்றும், ஒப்புக்கொள்ளக்கூடியதுமான மனுக்களாக இல்லை என்றும், ஆகவே தான் அத்தகைய மனுக்கள் கவனிக்கப்படவில்லை என்றும் கலெக்டர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்.

SRI P. S. SANTHANAM : திருவண்ணாமலை தாலூகாவிலே **91** விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அதிலே ஒருவருக்கும் கொடுக்காத காரணம் என்ன ? அவர்கள் நாணயம் அற்றவர்களா ? அல்லது கடன்காரர்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கலெக்டர் அளித்திருக்கிற விவரம். **The surrender of the balance amount was due to want of *bona fide* applications.** அதுதான் திருவண்ணாமலைக்கும் பொருந்தும் என்று நான் கருதுகிறேன்.

SRI A. VEDARATHNAM : இங்கே மேஜைமேல் வைத்திருக்கும் ஸ்டேட்மெண்டில் குறிப்பிட்டிருக்கிற பிரகாரம் நெல்லுக்காகக் கொடுக்க வேண்டிய தொகையில் **50** ஆயிரம் ரூபாயும், கரும்புக்காக ஒதுக்கிய தொகையில் **1** லட்சத்து **20** ஆயிரம் ரூபாயும் " ஸரண்டர் " செய்யப்பட்டதாக காணப்படுகிறது. இது யாருடைய தவறு ? யாருடைய தவறினால் அவ்வளவு பெரும் தொகை " ஸரண்டர் " செய்யவேண்டி ஏற்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நாம் ஒப்புக்கொள்ளக்கூடிய மனுக்கள் வராததுதான் காரணம். ஆனால், மொத்தத்தில் " இன்டன்ஸிவ் மன்யூரிங் ஸ்கீம் " இலே நெல்லுக்காக ஒதுக்கப்பட்ட தொகை பூராவும் செலவிடப்பட்டது என்று நான் முன்பே தெரிவித்தேன்.

---

[a] Printed as Appendix III on page 431 infra.

14th March 1958]

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether such a huge amount has been surrendered because of the defect in the system of granting loans?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think so, Sir.

SRI K. ANBAZHAGAN : தக்க சான்றுகளோடு கடன் கேட்கப்படாத காரணத்தால் கடன் முழுவதும் கொடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கிற அரசாங்கம், அந்தத் தக்க சான்றுகள் எதிர்க் கட்சியினர் தேர்ந்தெடுக்கப் பட்ட இடத்திலே மட்டும் தான் கிடைக்கவில்லையா என்று அறிய விரும்பு கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே கட்சிப் பிரச்னை ஒன்றுமில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : பல சமயங்களில் கடன் அனுமதிக்கப்பட்டாலும்கூட இந்த "பெர்ட்டிலைசர்கள்" ரொம்ப காலம் கடந்து வருவதால் ஜனங்களுக்குப் பூரணமாக பயன் படுவது இல்லை. அதனாலும் அனேகர் வாங்கிக்கொள்ளாமல் இருக்கக்கூடும். இம்மாதிரி நிலைமை மதுரைஜில்லாவில் ஏற்பட்டது. ஆகவே, எந்தச் சமயத்திலே விவசாயிகளுக்கு இவை வேண்டுமோ அந்தச் சமயத்தில் கிடைப் பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அப்பொழுதுதான் கடன் முழுவதை யும் அவர்கள் உபயோகப்படுத்தமுடியும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரசாயன உரத்தைப்பற்றிய வரை பற்றுக்குறை இருக்கிறது. இருந்தாலும் கூடியவரை கவனம் செலுத் தப்பட்டு, காலாகாலத்தில், கிடைப்பதற்குத்தான் அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது. ஆனால், மதுரையிலே நடந்த விவரங்களைப்பற்றி கனம் அங்கத் தினர்கள் கேட்டார்கள். இப்பொழுது என்னிடம் இருக்கும் விவரங்கள் எல்லாம் வடாற்காடு ஜில்லாவைப்பற்றியவைதான்.

SRI S. M. ANNAMALAI : வேலூர் தாலூகாவிலிருந்து சுமார் 18 மனுக்கள் வந்திருக்கின்றன. ஆனால், "சாங்ஷன்" செய்யப்பட்ட மனுக் கள் 28. பத்து அதிகாமாக இருக்கிறது. இது எப்படி ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த விவரங்களை இவ்வளவு குறுகிய காலத்தில் பார்த்ததைப்பற்றி நான் பாராட்டுகிறேன். எனக்குக்கூட அது புரியவில்லை. அதைப்பற்றி மறுபடியும் விசாரித்து பின்னால் வேண்டுமானால் சொல்லலாம்.

SRI S. LAZAR : சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட நிலச் சட்டங்களின் காரணமாக நிலச்சொந்தக்காரர்கள் அக்கறை எடுத்துக்கொள் வதில்லை. ஆனால், விவசாயி உரம் வேண்டும் என்று கேட்கப் போகும் நேரத்தில், அவர்களுக்குப் பட்டா இல்லை, சொத்து இல்லை என்ற கார ணம் காட்டி மறுக்கப்படுகிறது. விவசாயம் பண்ணக்கூடிய விவசாயி களுக்கு அவர்களுடைய பங்காக 60 பர்சன்ட் கொடுக்கப்படுகிறது. அறு வடையாகும்போது, விவசாயிகளுக்குரிய அந்த 60 பங்கு மகசூலிலிருந்து "முதல் சார்ஜ்" ஆக வைத்துக்கொண்டு அவர்களுக்குக் கடன் விநி யோகிக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நிலச்சொந்தக்காரர்களாக இல்லாத விவசாயிகளுக்கும், பயிர்செய்கின்ற விவசாயிகளுக்கும் கடன் கொடுப் பதற்குத்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏனென்றால் இது குறுகிய காலக் கடன். அறுவடையின்போது இதை வசூலித்துக்கொள்ளலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : ஜில்லாக்களுக்கு ஒதுக்கக் கூடிய பணங்களை கேட்டு வரக்கூடிய விண்ணப்பங்களை சரியான முறையில் பரிசீலனை செய்யாமல் ரெவின்யூ இலாகாவினர் இந்தமாதிரியாக ரிபோர்ட் கொடுக்கிறார்கள். இதை நான் பலமாக ஆட்சேபிக்கிறேன். ஆகவே

[14th March 1958

இனிமேலாவது சரியான முறையில் பரிசீலனை செய்து கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ? அதேபோன்று ஜில்லாக்களுக்கு ஒதுக்கக்கூடிய பணத்தை செலவழிக்காமல் இனிமேல் வைக்காது, அந்தந்த ஜில்லாவுக்கு ஒதுக்கப்படுகிற பணம் அந்த ஜில்லாவிலேயே செலவழிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர்களுக்கு நான் இனிமேல் ஒதுக்கப்படுகிற பணத்தை விண்ணப்பம் சரியாக இல்லாது இருந்தும் விநியோகித்து விடுகிறேம் என்று சொல்லமுடியாது.

SRI V. SANKARAN : செலவழிக்கப்படாத பணம் அடுத்த வருஷத் தொகையோடு சேர்த்து அந்தந்த ஜில்லாவிலேயே கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் பணம் பூராவும் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அடுத்த வருஷத்தில் எவ்வளவு பேருக்கு வேண்டுமோ அவ்வளவு பேருக்கு அளிக்கப்படுகிறது.

Urea

* 322 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Agricultural Department have been recommending the use of ' Urea ' (fertiliser) during the current year;

(*b*) the merits and demerits of Urea as compared with ammonium sulphate;

(*c*) the steps taken by the Government to popularise the use of fertiliser Urea; and

(*d*) whether the Government have issued instructions to the distributors of ammonium sulphate that purchasers of ammonium sulphate should be compelled to purchase a fixed proportion of Urea?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*d*) A statement[a] is placed on the table of the House.

SRI S. LAZAR : மற்ற இடங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. திரிச்சிராப்பள்ளி ஜில்லாவில் அமோனியம் சல்பேட்டை வாங்கும்போது யூரியாவையும் வாங்கும்படியாக நிர்பந்திக்கப்படுவதாக அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி நிர்ப்பந்திக்கப் படுவதாக இருந்தாலும் யூரியா வாங்குவதனால் விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

Road Inspectors

* 324 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Works be pleased to state the number of Harijans among provincialised Road Inspectors in the Highways Department, districtwar?

THE HON. SRI P. KAKKAN : The figures are as follows :—

Name of the district.	Number of Harijan Provincialised Road Inspectors.
Chingleput	4
South Arcot	4
Tanjore	2

[a] Printed as Appendix IV on pages 431–432 infra.